# பத்திரிக்கை செய்தி

மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (State Council of Educational Research and Training) இயக்குநர் திரு.க.அறிவொளி மற்றும் கல்வி துறை அலுவலர்கள் சிலர் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்ட "உலகமெல்லாம் தமிழ்" என்ற திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை அதற்கென செலவிடாமல் பல்வேறு வகைகளில் முறைகேடுகள் செய்வதாக எழுந்த புகாரின் அடிப்படையில், 29.01.2019 -ம் தேதி மேற்படி திரு.க.அறிவொளி மற்றும் கல்வி துறை அலுவலர்கள் சிலர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட மேற்படி வழக்கின் தொடர்ச்சியாக திரு.க.அறிவொளி என்பவரது இல்லம் மற்றும் சென்னை நுங்கம்பாக்கம் கல்லூரி சாலை DPI வளாகத்தில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் இன்று 30.01.2019-ம் தேதி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையினரால் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையின் போது வழக்கின் விசாரணைக்காக ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இது சம்மந்தமாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினர் தொடர்ந்து புலன் விசாரணை செய்து வருகின்றனர்.